உ

# கலிகால அம்மானை
# கலிகால சிந்து



ஆக்கியோன்:
கலாபூஷணம் நாகமணி விநாயகமூர்த்தி

30/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ



# அரி நமோ நாராயணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னுரை

*பெரியோர்களே!*

ஐந்தாம் வேதமாகிய மகா பாரதத்தில் சொர்க்கா ரோகண பர்வ சம்பிரதாய மகாவிந்தமெனும் வைகுந்த அம்மானையுடன் கஞ்ச னம்மானை எனப் பல அம்மானை களைப் பாடியும் கேட்டும் அறிந்தும் இருப்பீர்கள் அப்பாடல்கள் ஆழ்ந்த அறிவும் தரும நீதி ஆத்மீகச் சிந்தனையும் மகா விஸ்னு மீது அழவற்ற பக்தி கொண்ட பழமை வாய்ந்த பாடலாகும்.

*அன்பர்களே!*

அடியேனும் அப்பாடல் ஓசை நய இனிய நடையிலும் ஈர்க்கப்பட்டதின் நிமித்தமே இக்கலிகால அம்மானை, சிந்து என்பன பத்து வருட முன் உதயமாயின முற்கூறிய அம்மானைகளில் இருக்கும் விருத்தம் கொச்சகம் இந்தம்மானையில் இடம்பெறவில்லை. இது ஓர் சிறு மணலுக்கும் அவைகள் பெரும் மலைக்கும் ஒப்பிடலாம். எனவே. இப்பாடலைப் பாடுகின்ற தாங்கள் பிழை நீக்கி இசையோடு பாடி இன்புற்று மகிழ்வீர்கள் என்றும் தங்களின் ஊக்கமே இப்புத்தகம் வெளிவரக் காரணம் எனக்கூறி உங்களிடமே விமர்சனத்திற்காக விட்டு விடுகின்றேன்.

நன்றி

வணக்கம்!

இவ்வண்ணம்,
தங்களின் அன்பன்
**புலவர் ஈஸ்பரி மூர்த்தி,**

**நா. விநாயகமூர்த்தி**
சேனைக்குடியிருப்பு,
27 - 09 - 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலிகால அம்மானை

## காப்பு

விகடதடகரிமுக மூசிக வாகனன்
சகடகுடவயிற்றவன் தம்பிரான் - இணையடிதாழ்
தொடருகலிகால அம்மானை சூளுரைக்க
படர்கதொரு கணபதிதன்பதமே - காப்பு

## துதி

முன்னவனேவானோர் முதற்பொருளே வாரணனே
கண்ணன் மருகோனே கஜமுகனே முன்னடவாய்
சித்தி வினாயகனே சிவனாரின் தன்மகனே
முத்திதத்து காரும் முருகர் சகோதரனே
தந்தைகுருநீயே தயாநிதியே இக்கதைக்கு
மந்தைதனை மேய்த்த மாயன் மருகோனே முன்னடவாய்
பெருகு செவியோனே பிள்ளையாரே என் தனர்க்கு
அருகதையாகாது அருள் தருவாய் ஆனைமுகா
காணிக்கையாகக் கலிகால அம்மானை தனை
மாணிக்கப்பிள்ளையார்க்கு மலராகச் சாற்றிவிட்டேன்
வீணை கரமேந்தி வெண் தாமரை தனிலே
சாலவே வீற்றிருக்கும் சரஸ்பதித்தாயாரே
அரவு தவறாமல் அருகாக நீயிரம்மா
குரலில் குடியிருந்து கொஞ்சுமம்மா என்தாயே
பூவினிலே உறையும் பொன்னே மணிவிளக்கே
நாவில் இருந்து நடம்புரிவாய் என் தாயே
கூவும் குயில்போலே கூவிடவே என்தனக்கு
நாவிசைந்து பாட நாரணியே முன்னடவாய்
கவிக்கு முதற்பொருளே கன்னிமணேன் மணியே
தவித்தடுமாறாது சரஸ்பதியே முன்னடவாய்
செந்தமிழில் நானடியேன் செப்புங்கவிதைகட்கு
என்உள்ளத்திருந்து உதவி செய்ய வேண்டுமம்மா
கலிகால அம்மானைதனைக் கருத்துடனே நான் பாட
கலைவாணி தன்னைக் கரம் குவித்துப் போற்றி செய்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா அறுமுகனே அமரர் சிறைமீட்டவனே
மெய்யாக யான் பாட வேண்டும் வரம் தருவாய்
தேவசிறை மீட்ட தென்கதிரைவேல் முருகா
மூவேந்தர் தான் வழர்த்த முத்தமிழில் யான் பாட
கன்னித்தமிழில் கலிகால அம்மானை தனை
பண்ணிசைந்து பாட பாலகனே முன்னடவாய்
சரவணப் பொய்கைதனில் தாய் அணைத்தவாறது போல்
அரவணை த்து என்றனர்க்கு அருள்தருவாய் வேலவனே
கானமயிலாட கண்டிருந்த வானதுபோல்
நானும் கவிபாட நாடினேன் இப்புவியில்
புலவர் கவிஞர் பொய்பேசா நல்லவர்க்கு
அறிஞர் கலைஞர் அனைவோரின் தாழ் பணிந்தேன்
கற்றும் அறிந்திலேன் கவிபாட நானறியேன்
முற்றும் உணர்ந்தறியேன் முத்தமிழில் சொல்லறியேன்
சித்தமுணர்ந்து என் சிந்தனையால் வந்த கதை
குற்றம் பொறுத்து கொண்டுமனம் பொறுப்பீர்

## நூல்

கன்னி அருகாகக் கணவன் இருக்கையிலே
கட்டுக்கதைகளுடன் கனகதைகள் தான் கதைத்தார்
கேளாயடிகண்ணே - கிளிமொழியே இக்கதையை
தெளிவாகப் பாடுகிறேன் செவியுற்றுக் கேட்டிடுவாய்
ஐவருடன் தேவி அம்பாள் துரோபதியும்
கலிகாலம் வந்ததென்று கானகத்தில் சென்றதையும்
பாரிலுள்ள மாந்தர் படித்தறிய வேண்டுமென
வைகுந்தம் போன வழிவாறு தானறிவாய்
அறிவேன் மணவாளா ஐயாவே என் கோவே
கலிகாலம் என்னதென்று கண்டு அறியேனே
தெழிவாக என்றனக்கு சிந்தை குழிரும்படி
உற்றறிந்து கேட்க உரைசெய்யும் அத்தானே
அத்தானே முத்தே அழகு துரைக் கோமானே
செத்தாலும் நான் மறவேன் சீராகப்பாடுமத்தான்
பாடுகிறேன் பெண்ணேபாழும் கலிகாலமதை
தாயை உதைத்திடுவார் தந்தையரையும் அடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதைப்படுத்தி வதை செய்யும் காலமம்மா
பத்துமாதம் சுமந்து பாலூட்டித் தாராட்டி
பெற்று வளர்த்தவளை பிசாசி என்று ஏசிடுவார்
கண்ணின் இமைபோல் காத்து நிதம் பார்த்தவளை
கள்ளி எனச் சொல்லும் காலம் கலிகாலமம்மா
ஆசை மகனெனக் கன்பாய் நிலாக்காட்டி
பாசமுடன் எம்மை பகலிரவு கண்விழித்து
சீவித்தலை கோதி என் செல்வமே என்றவளை
கூசாது மக்கள் கொடுமை செய்யும் காலமம்மா
என்னவென்று சொல்வேன் என்தாய். அவள் நிலையை
என் கண்ணாலே கண்டேன் இதுதான் கலிகாலம்
தந்தைதாய்தனயனைத் தானடித்துக் கொல்லுவதும்
மந்தைபோல் மக்கள் மறகட்டும் காலம் இது
பகலிரவு பாரார் பசிதனையும் தான் நினையார்
உளைத்து வந்து எங்களுக்கு உணவூட்டும் தந்தையரை
மக்கள் இவர்க்கு வசைபாடும் காலமடி
மக்கள் உடன் பேரர் மலைபோல் இருக்கையிலே
பக்கத்தில் போகப் பயப்படும் காலமம்மா
தந்தை தாய் சொல்லை தட்டிக் கழிப்பதுவும்
நீ யார் நான் யார் என நின்றேசும் காலமடி
உற்றார் உறவினர்கள் ஊர் நிறைந்தாலற் போல் இருக்க
ஆண்டி பரதேசியப்போல் அலையும் கலிகாலமிது
தமயன் இளையோர் தம்பிமார் தன்னுடனே
இயமன் தனைப்போல் எதிர்கொல்லும் காலமிது
அண்ணன் பொருளை அபகரிக்கும் தம்பிக்கும்
தம்பி பொருளதனை தமயன் பொருள் என்று சொல்லி
வாதுகள் பேசி வழக்காடும் காலமிது
ஒரு குடலி பிறந்து ஒருமிக்க அன்னமுண்டு
பிறவி என்று பாராது பிரிந்தேசும் காலமிது
அண்ணரிட பெண்டீர் அறிவில் உயர் பெண்ணினத்தை
வண்ணமுயர் அண்ணி என மனந்தனிலே நினையார்
தம்பி மனைவி தன்பிறவி பெண்ணதனை
வெம்பி மனம் நோக வேசை எனத்தானினைத்து
பையில் இருக்கும் பணம் அதனைத்தான்காட்டி
கையில் பிடித்திழுத்து காம பசி தீர்த்திடுவார்
தங்கை தமக்கை தன்சொந்த பெண்ணினத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கப்படுத்தும் பாவிகளின் காலமம்மா
மங்கம் குலைய மரியாதைதான் குலைய
சந்தி தனில் நின்று தாவடியும் பேசிடுவார்
நங்கையரே நாட்டில் நல்ல மழை பெய்யாது
தங்கைகளைப் பெண்டாய்தான் எடுக்கும் காலமம்மா
சென்னல் விளையாது தேசத்திலே புயலும்
அள்ளுண்டு வெள்ளமதில் அவதிப்படும் காலமடி
கடலும் பெருக்கெடுக்கும் கரையோரம் தானழியும்
திடலும் மடுவாகும் திண்ணமிது கண்மணியே
வானும் ஒறுக்கும் மழையும் ஒறுத்துவிடும்
ஊநும் ஒறுத்து உயிர் போகும் காலமிது
காலங்கள் மாறும் காற்று புயலால் அழியும்
கோலங்கள் கொண்டு கொடுமை செய்யும் காலமிது
தம்பி தவறுதன்னை தமயன் அறிந்தவுடன்
வெம்பி மனம் பதறி விண்டேசும் போதினிலே
என்றச்சி தன்னை எடுத்தும் குடித்திடுவார்
நஞ்சித் திராவகத்தால் நாட்டிலுள்ள மக்கள் எல்லாம்
பிஞ்சிலே மாண்டு பெருமை கொள்ளும் காலமிது
இன்னும் இதுபோல் எத்தனையோ உண்டுமடி
கண்ணே நவமணியே கவனமுற்று கேழுமடி
காதல் இவர்க்கு கைகூடாவிட்டாலும்
கல்வி கடன் பொருள் கனவியாதி நோய்களுக்கும்
பசியின் கொடுமையுடன் பற்பல வெஞ்சமதால்
உயிர் அதனைப் போக்குவிக்கும் உத்தமரின் காலமிது
முறை என்று பாரார் மூத்தவர் என்றே நினையார்
நிறையப் பொருள் உண்டோனை நினைந்தெடுக்கும் காலமிது
உற்ற கணவன் உயிரோடு இருக்கையிலே
குற்றம் புரிந்து பல குழந்தைகளும் பெற்றிடுவார்
கணவனுக்கு நஞ்சு காரிகையும் தான்கொடுத்து
விதமாக வேறு ஒருவனோடு வீற்றிருக்கும் காலமடி
கலியாணம் ஆகுமுன்னே கெற்பமது உண்டானால்
அழிய மருந்துண்டு அவதிப்படும் காலமம்மா
நம்பின் பெண்ணை நட்டாற்றில் தள்ளிவிட்டு
கம்பிகள் நீட்டி கார் ஏறும் காலமடி
தான் சுமந்து பெற்ற தன் குழவி தானுமதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்று மடுவுகளில் ஆறணங்கு தாழ்திடுவாள்
தன் குழவி தன்னை தான் குழந்தை அல்லவென்று
பெண்ணின் மனம் நோக பெருமை கொள்ளும் காலமடி
பொய்கள் பல கூறி பெண்மனதை அன்பாக்கி
மெய்கள் வெளித்திடவே விரைந்தோடும் காலமிது
தங்கை என நினைந்து தான் கதைத்தால் அன்னேரம்
மங்கை தன் மனைவி மனம் வெறுக்கும் காலமடி
தன் மனைவி தன்னை தானரிந்து துண்டாக்கி
பிள்ளைகளை வெட்டி பெலி கொள்ளும் காலமம்மா
பாசானம் மூலி பகர் ஒண்ணா நஞ்சிகளும்
தூசன வார்த்தைகள் சொல்லும் கலிகாலமிது
கற்புநெறி உள்ள கன்னியரை மங்கையரை
புற்றீசல்போலே போய் குவியும் காலமடி
மாமன் தன் மாமி மைத்துனன்மார் தன்னுடனே
சமர்கள் பல புரிந்து தலையுடைக்கும் காலமிது
அத்தை அவள் என்று அனுசரணை இல்லாது
சொத்தைதனில் கொஞ்சி சுகம் அடையும் காலமிது
மருமகன் தன்னைமருவி அணைவதுவும்
மகளும் அதுகண்டு மாய்த்துயிரை விட்டிடுவாள்
தன் மகளை கற்பழித்து தாய்மை நிலையை எய்தவுடன்
தாசி வேசி போடி என தான் துரத்தும் காலமம்மா
என்தகப்பன் பாவி எனைக்கெடுத்துப் போட்டதனால்
மாநிலத்தில் நான் இருந்தால் வசை வரும் என்றறிந்து
கதறி அழுது கண் கலங்கி ஏக்கமுடன்
தெருவில் அலைந்து திடங்கொண்டு வெஞ்சமதால்
கடிதம் எழுதி கடவுளே மற்றோர்க்கும்
வாராது காப்பாய் என மாண்டிடுவாள் கண்டாயே
கண்டாயோ பெண்ணே கலியின் கொடுமையிதை
வண்டு நிகர் கூந்தல் உள்ள மாதரசே தெப்புதற்கு
தண்டை கிடக்கும் தையல் உந்தன் கையாலே
செழும்பு மணவாது தேசிக்காய் தானெடுத்து
பூசிக் கழுவி புடை கொள்ள நீர்வாத்து
கொண்டு வந்து எந்தனர்க்கு கோமையிலே தந்திடுவாய்
தாகம் தணிந்த பின்பு தார் குழலே நான் படிப்பேன்
என்தன் மணவாளா இப்படியோ நீ உரைத்தீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் மணவாளா கடும் கோபம் கொள்ளாதே
தாகம் தணியத் தண்ணீரது செம்பினிலே
அருகினிலே வைத்திருக்கன் அம்பாக தாயெடுத்து
பருகிக் குடித்த பின்பு பாவி நான் கேட்டிருக்க
முடியாதே அத்தான் முற்றும் நான் கேட்டிடவே
படியும் என் மன்னா பாழும் கலிகாலமிதை
கட்டிக் கரும்பே கற்கண்டே சர்க்கரையே
விட்ட குறையதனை விளம்பக் கேள் பெண்மயிலே
நடைகள் உடைகள் நாகரீகமாமெனவே
உணவு விலையேற உயிர் போகும் காலமடி
வெண்காயச் சாரி என்பார் மிக்க நைலோனே என்பார்
மிஸ்கேட் இவை என்பார் மேனி தெரிய விட்டு
குசியாகவே குரங்கு குந்தினமாதிரிபோல்
பசியில் இருந்து படம் பார்க்கும் காலமிது
ஓதுகின்ற புஸ்தகத்தின் உள்ளின் நடுவினிலே
காதல் கதைபடிக்கும் காலம் கலிகாலமம்மா
கன்னியும் காதலனும் கார் ஏறி ஓடியபின்
கதறியே தாய் தகப்பன் கட்டியழும் காலமிது
கணவர் அருகே கண்ணயர்ந்து தூங்கியபின்
உளவாகி அயலானோடு உறவாடும் காலமம்மா
தங்கை கணவன் தன்னை தானடுக்கும் மங்கையரும்
மங்கை அவள் தன்னுயிரை மாய்த்துவிடும் காலமடி
பருவக் குமரிகளை பல்லிலாதே கிழவன்
தருக எனக் கேட்டும் சண்டாளர் காலமிது
ஆறுபெற்ற பெண்ணும் வேற் ஆணோடு ஓடுவதும்
சீற்றமுடன் பிள்ளைகளும் சீரழியும் காலமிது
ஆணும் அது பெண்ணாய் பெண்ணும் அது ஆணாக
மாறுகின்ற காலம் மங்கைரே சொல்வதைக்கேள்
சந்திரனில் மனிதன் தான் நடந்து சென்றதுவும்
இந்திரனும் ஓடும் எங்கள் கலிகாலமிது
மந்திரன் தன்னால் வசைப்படுத்தி மங்கையரை
தந்திரமாய் சேர்ந்து தப்பும் கலிகாலமம்மா
மூச்சி வெளிக்கிடாது முன்னுயிரும் போயினபின்
சாக்கிலே கட்டி தான் புதைக்கும் காலமிது
மூத்தோர் பெரியோர் முறைதவறா ஞானிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தே பழித்திடும் பாவிகளின் காலமிது
சமயப் பெரியார் சன்னியாசி ஆனவரும்
இமயமலை அருகில் இருந்து தவம் செய்பவரும்
வேதநூல் ஓதும் வேதியரும் பூசகரும்
நாதன் ஒருவன் தாழ் நம்பும் பெரியோரும்
மறைகள் தெரிந்த மதத்தலைவர் தங்களையும்
குறைகள் பல கூறி கொடுமை செய்யும் காலமிது
கரம் குவித்து தெய்வமதை சிரம் தாழ்த்தியே பணிந்தான்.
கல்லெறியும் பொல்லெறியும் கவண் எறியும் காலமிது
வேதியரை பூசகரை மெய் எழுத்தை ஓதுவிக்கும்
ஆசிரியர் தம்மை அவமதிக்கும் காலமிது
மாணவியை ஆசிரியர் மானபங்கம் செய்வதுவும்
வீணாகிப்போகும் மெல்லியரின் கல்வியடி
செய் நன்றி தன்னை சிந்தைதனில் கொள்ளாது
பொய் அதை மெய் என்றென்றும் போக்கிரி காலமிது
ஆசையுடன் வளர்த்த ஆடுமாடு கோழிதனைக்
காசு கொடுக்காது களவெடுக்கும் காலமம்மா
கோழி வந்து முட்டையிட்டு கொக்கரித்துச் சென்றாலும்
பாவி சிலபேர் பதுக்கி வைக்கும் காலமிது
கூடும் பொது இடத்தில் கொள்கைவீரன் என்று சொல்லி
காட்டிக் கொடுக்கும் கயவர்களின் காலமம்மா
வசந்திகளும் சூதுகளும் வளக்கோரம் பேசுதலும்
சூதுகள் செய நினைக்கும் துடுக்கரின் காலமிது
நீதியும் இல்லை நியாயமும் இல்லையம்மா
பாதிப் பணம் போனால் பாரெல்லாம் பேசுமடி
சாராயம் கஞ்சா தள்ளாடும் கள்ளுவடி
மோதவே போதை தனில் முழுகும் கலிகாலமம்மா
புளுகு களவு பொய் பொறாமை வஞ்சகமும்
வளுவாது பேசும் வாய்மதத்தோர் காலமடி
பூமியுடன் வீடு பொற்கொடியே நெல் விதைகள்
மாறுகின்ற காலம் மங்கையே இன்னமுங் கேள்
நெல்லில் பதறுகளும் நெல் மரக்கால்பெட்டைகளும்
அரிசியினில் கல்லுமியும் ஆவிட பால் தயிரும்
எண்ணையுடன் தண்ணீரும் எப்பொருளும் அப்படியே
கலந்து கொடுக்கும் காலம் கலிகாலமம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணர் சிலபேர் வீதிகளில் சந்திகளில்
குந்தியிருந்து குழானடிக்கும் காலமிது
தன்மதத்தை விட்டு பிறமதத்தை நாடி சிலர்
உன் மந்து போகும் உறுத்தர்களின் காலமடி
தெய்வமது எண்ணார் தீவினைக்கு அஞ்சார்கள்
உய்யும் வழி தெரியா உலுத்தர்களின் காலமிது
குண்டாலே மாண்டிறந்த கோடான கோடியம்மா
அணுவாயுதத்தால் அழிந்து போகும் நாடுகளும்
ஆகாயக் கப்பல் அந்தரத்தில் பத்துவதும்
சேவையில் ஓடும் றெயின் வஸ் மோதுமடி.
இப்படியாக எங்கும் நடக்குதம்மா
கணக்கெடுக்க என்னால் கண்மணியே ஏலாது
பத்திரிகை ஊடகங்கள் பற்பல செய்திகளை
நித்தம் நடப்பதனை நீ அறிவாய் பெண்மயிலே
வத்தல் மிளகாய் வாள் பயறு மஞ்சலுடன்
குரக்கன் கேள்வரகு கொள்ளுடனே சோளகமும்
மல்லியுடன் மாசாலை மாவரைத்து எங்களுக்கு
தெள்ளிக்கிடைக்கும் செய்ய கலிகாலமிது
சோறு கறியுடனே சொய்சாக நாம்போக
காறு பஸ் ரெயில்கள் கப்பல் ஏறும் காலமிது
ஏர் உழுதல் சூடடிக்க ஏற்றமுடன் தண்ணீரும்
நாற்று நடுங்காலம் நங்கையரே இன்னும் ஒன்று
கயிறு வகை துடைப்பன் கடலில் விடு நூல் வலைகள்
மயிர் மரம் வெட்ட மாதவன் போல் வெளிச்சம்
வீடு கட்ட கல்வகைகள் வேயநிதம் ஓடுவகை
காடழித்து மேடுகளை கற்தரைபோல் சீராக்கி
நாடு நகராக்கும் நல்ல கலிகாலமிது
சிறுவர் சிறுமியர்க்கு சேர்ந்து விளையாடுவதற்கு
பொம்மை வகை சிறிய போட் மைனர் கார்வகைகள்
பூவகைகள் போத்தல்வகை போட்டுடைக்கும் கிளாசுவகை
பான வகை பலவும் பாரறியும் பெண் வகைகள்
அணிய உடுக்க அத்தனையும் எங்களுக்கு
மிசினாலே செய்யும் மிக்ககலி காலமிது
சோறு கறி சமைக்க சொய்சாக நாம் அணிய
சேட்டு வகை தைக்கும் செய்ய மிசின் காலமம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டுமுறிவு பொருந்தநோ அத்தனைக்கும்
புற்றுநோய்க்கே கரண்டு புடிக்கும் கலிகாலமிது
மாட்டுவரி தண்ணீர் வரி மரவரியும் லாம்புவரி
வீட்டுவரி றோட்டுவரி மென்மலரே இன்னுமொன்று
கூடிய பிள்ளை பெறா குடும்பக்கட்டுப்பாடுமடி
குளோனில் முறையும் கூடுகின்ற விஞ்ஞானம்
மலடுகளும் பிள்ளை பெற்று மவுசியுறும் காலமடி
காதல் கனிரசமே கடைந்தெடுத்த ஓவியமே
பேடை எனும் பெண்ணே பெருமூச்செறி யாதையடி
இவ்வீட்டிலே நெருப்பு எரிந்து கொண்டே இருந்தால்
அண்டை வீட்டுக்காரர் அனைவோர் பொறாமையடி
தற்கொலையும் டேஞ்சர்களும் சந்தி தெரு வீதிகளில்
பற்றிப் பிடித்தடித்து பணம் பறிக்கும் காலமம்மா
காடுகளில் பற்றைகளில் காம விளையாட்டுகளும்
கோடுதனில் பொலிசார் கொண்டேற்றும் காலமிது
நாடு நகர் ஊர்களிலே நடக்கும் அதிசயத்தை
என்னவென்று சொல்ல என் நாவே கூசிதடி
கோயில் தனிற் கொள்ளை குமாரி அவள் கற்பழிப்பு
சாமி பலர் கைதாகி சரணடையும் காலமடி
கோயில் குளங்களிலே கும்பிடவே சென்றாலும்
சாதி முறை பார்க்கும் சண்டாளர் காலமிது
நாடக மேடைகளும் நடன விளையாட்டுக்களும்
பாடி ஒலிபெருக்கி பாடுகின்ற காலமம்மா
வனம் தனில் வாழும் வளர்க்கும் சிலமிருகம்
துரத்தி கடிக்கும் தூய கலிகாலமிது
படித்தறியாக ஏழை பரதேசி உலோபிகளை
பிடித்துப்பறிக்கும் பிரட்டர்களின் காலமிது
நல்லவர்கள் என்று நாடி அழைத்துணவு இட்டால்
பொல்லாப்பு செய்த விட்டு புறப்படுவார் இங்கு சிலர்
எவ்விடமே சென்றாலும் எத்தனைக்கும் லஞ்சமடி
கைக்கூலி வேண்டும் கவடர்களின் காலமிது
பாயும் பொருளேற்றம் பாவையரே இன்னுமொன்று
கீயூ வரிசையுடன் கிழவி பெறும் காலமிது
போடி மரபென்பார் பொல்லாப்பு செய்திடுவார்
லேடி ரவுடிகளால் நிதம் திரியும் காலமிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேசி என்று தாசி என்று வீதிகளில் சென்று நின்று
காசி கறந்தெடுக்கும் கன்னிகையர் காலமிது
சினிமா நடிகைகளை தெய்வம் போலே நினைந்து
குவிந்த சிரம் தாழ்த்தும் குண்டர்களின் காலமிது
அறிஞர் பெரியோர் அவர்கள் படம் தானகற்றி
ஆபாசப் படம் அதனை அறைந்து விடும் காலமடி
புண்ணியம் இல்லை பொதுநலமும் இல்லையம்மா
அன்னியன் கையால் அடிபடும் காலமிது
தன்தாய்மொழியை தான் பேச மாட்டாது
அன்னியவன் பாசையிலே அழைத்திடும் காலமிது
மந்தைகளைப் போல் மனிதர் மிருகமதாய்
பந்தை உதைப்பதைப்போல் பாவையரை தான்உதைப்பார்
பாவையவள் ஆண்மகனை பத்தா என்று அறியாது
பூவைப் பிழிவதைப் போல் புருசனையுமே பிழிவாழ்
ஒன்றையொன்று வெல்லாது உண்மையிது பொய்யுமில்லை
நன்றாகப் பெண்ணே நவில்கின்றேன் கேளுமடி
நாய் தனில் இச்சை கொண்ட நங்கையர்கள் வாழ்வதுவும்
பூனை தனில் நாய் புணர்ச்சியுறும் காலமிது
இளமை தனில் ஆண்மை குன்றி இரவு பகல் ரீவி படம்
கனவுகண்ட காட்சி கன்னியர் காளையரை
தொடர்கின்ற காலம் தொடராக்கனிகாலம்
கணவன் அறியாது கறிபலவும் சோறாக்கி
பசியோடு அவன் இருக்க பாவியவள் நன்றாகத்
ருசியாக பால் தயிரும் தின்றுவிடும் காலமம்மா
பிச்சை கேட்டு வாசலுக்கு பேதையர்கள் வந்த நின்றால்
ஒன்றுமில்லை என்று சொல்லி ஓட்டி விடும் காலமிது
கலியன் பெருமைதனை களறுகிறேன் கேழுமடி
ஒரு சூலில் ஈர்மூன்று ஒன்றாகப் பெற்றிடுவாள்
பத்து எட்டு வயதில் பாலகனைப் பெற்றெடுத்து
கக்கத்தில் இடுக்கி களிப்புறும் காலமம்மா
தங்க நகை பூமி தானடவு வைத்துவிட்டு
வட்டி குட்டி கேட்டு வழக்காடும் காலமிது
பழைய நகை விரும்பார்பாஷன் வகை வேறுமடி
வழையல் பல ஆண்கள் மாட்டி விடும் காலமிது
சுருட்டு சிகரட் வகை தோகையர் பல நாடுகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடிப்புகை கஞ்சா மிக அருந்தும் காலமம்மா
மாடாடு பன்றி மான் இறைச்சி போலாக்கி
நாடுதனில் மக்களுக்கு நம்பும்படி செய்திடுவார்
புண்ணியமும் இல்லை பொது நலமும் இல்லையம்மா
தன்னலமே கருதும் தனவந்தர் காலமடி
ஊரரதனையும் விற்று உலவாயில் போட்டுவிட்டு
பேருக்கு நல்லவன் போல் பேரெடுக்கும் காலமிது
எத்திப் பிழைப்பதுவும் ஏமாற்றுக் கண்துடைப்பும்
குத்து வெட்டு பட்டு குருதி ஓடும் காலமிது
கைதனிலே நேரம் காலையிலே தேதிகளும்
பைதனிலே ரேடியோ பாடி விடும் காலமடி
பருவ வயதுடைய பாலர் சிறுமியர்கள்
குருவி சிறிதுகூடதுபோல் குறுயங்கி காலமிது
பவள மணிச்சாறி பாவையர்கள் தானணியார்
கிழவர் கிறீம் பவுடர் கேட்டணியும் காலமிது
கட்டுகளும் வெட்டுகளும் காத்து இருப்பதுபோல்
சுற்றி தலைமுடியை தொங்கவிடும் தம்பியரும்
படித்து முடித்த பரீட்சையில் தேறிவிட்ட
கடிதத் தொடர்பு இன்றி கங்குகின்ற காலமிது
கன்னல் விளை நெற்பயிர்க்கு கனவியாதி நோய்களுக்கு
எண்ணை பசளை இடும் இனிய கலிகாலமிது
கீரியுடன் சற்பம் கிளியும் பருந்தினமும்
ஓநாய் முதலையுடன் ஒற்றுமையாய் வாழுமடி
ஆனையுடன் சிங்கம் ஆற்பரிக்குமே புலியும்
மானனையே மானிடர்க்கு மண்டியிடும் காலமிது
கமுகு தனில் தென்னை காய்கள் குலை மாறிவிடும்
எருமை பசுங்கன்று ஈன்று விடும் காலமம்மா
மண்ணில் மேல் ஆராட்சி வளர்ந்து கொண்டு போவதுவும்
தண்ணில் தனில்கரண்டு தானெடுக்கும் காலமிது
விண்ணில் விளையாட்டும் விரைந்திறங்கிச் சந்திரனில்
மண் கல் தூசி கொண்டு வலம் வரும் காலமம்மா
ஆட்சி அரசியலும் ஆர்ப்பமிடு எம்பிகளும்
காசிகளும் மாறும் காலம் கலிகாலமடி
ஆண்களுடன் பெண்கள் அறிவிலும் கல்வினிலும்
தங்கைகள் சரிநிகராய் தலை நிமிரும் காலமிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் சனாதிபதி பிரதமராய் பாரினிலே
அங்ககங்கள் மாற்றிடும் அரிவையரின் காலம்மா
ஏட்டில் எழுதவொண்ணா எடுத்தியம்பக் கூடாது
பாட்டியிடம் கேளு பைங்கிளியே நாளை பகல்
நாளும் கிழமைகளும் ஞாயிறு வெள்ளி புதன்
போயா வாயாக மாறும் பொன்னான காலமடி
தாய்பாலும் இல்லை தகரப்பால் மக்களுக்கு
சூப்பி கைக் கொண்டு தூர செல்லும் காலமிது
காப்பி இல்லை தேனீர் இல்லை காட்டா குடிகாலம்
போட்டோ தனி நொம்பர் கேட்டறியும் காலமிது
கடல் நீரும் தண்ணீராய் சில காலமதில் மாறிவிடும்
காட்டெடுத்து கூப்பன் கடை செல்லும் காலமிது
கை லஞ்சும் வெண்டி கடமை தவறி விடில்
சீட்டுக் கிழித்து திருப்பி விடும் காலமம்மா
கண்டாயோ பெண்ணே கலிகாலம் இன்னதென்று
வண்டு நிகர் கூந்தலுள்ள மாதரசி என்ன சொல்வேன்
கலியன் பெருமைகளை கண்மணியே உந்தனர்க்கு
சலியாது கண்ணே தானுரைத்தேன் ஆகையினால்
நடந்த அதிசயமும் நடக்கும் அதிசயமும்
இதற்கு மேல் நடக்கும் இன்னும் அதிசயமும்
ஒவ்வொன்றாக உந்தனர்க்கு நான் உரைத்தேன்
என்னருகே நீயிருந்து இனிதுற்று கேட்டாயே
கலியன் முடிய கடல் வந்து மூடிவிடும்
விடியப்பிரமா மேதியை தான் படைப்பார்
புல்லைப் படைப்பார் பூச்சி புளு தான் படைப்பார்
மரத்தைப் படைப்பார் வருணனையும் காற்றையுமே
ஊர்வன தன்னை ஒருமிக்க தான் படைப்பார்
பறப்பவை கோடி பாவையரே தான் படைப்பார்
நடப்பவையான நான்கு கால் ஷந்துகளும்
ஐவறிவு கொண்ட அத்தனையும் தான் படைத்து
முடித்த பிறகு மூவிரண்டு ஆறறிவு
ஆறறிவு கொண்ட மனிதனையும் தான் படைப்பார்
படைத்தபின் கண்ணே பாரளந்த மாயவரும்
கண்ணன் என் கோபாலன் காத்திடுவார் காரிகையே
திண்ணமுடன் பெண்ணே சிவனை மறவாதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி மறவாதே நட்பாசை கொள்ளாதே
இறைவன் ஒருவன் இருக்குதென்று எண்ணிவிடு
அறையில் பல காலம் உன் சிவன் அடைபட்டு நில்லாது
வண்ண குயில் குரலே மாதரசி என்மனையே
கொவ்வை கனி இதழே கோடி புகழ் உந்தனுக்கு
என்ன செய்வேன் பெண்ணே எந்தன் அறிவு மட்டில்
கூறி முடிக்கின்றேன் குறை ஒன்றும் வையாதே
உந்தனுக்கு நானடியேன் உரைத்த கலிகாலமதை
அம்மானே போல அழகாகப் பாடி விடில்
பெண்ணே உனக்கு நிகர் பேச முடியாது கண்ணே
ஆண்டவனே இக் கதையை அழகாய்ப் படித்தோருக்கும்
கேட்டு இருந்தோருக்கும் கிருபை செய்வாய் வல்லவனே
வல்லவனே வாழி மரபு தமிழ் வாழி
கற்றவரும் வாழி கவி பாடினோர் வாழி
அன்னமிட்ட தாய் மார் அறம்புரிவோர் வாழியவே
கிழக்கிலங்கை வாழி கீர்த்திமிகு மட்டு நகர்
அட்டதிற்கு இங்கிருக்கும் ஆலயங்கள் வாழியவே
வாழியவே வாழி வளர்க தமிழ் வாழியவே.

சுபம்

கலிகால அம்மானை முற்றிற்று

## கலிகால சிந்து

ஐவர் வன வாசம் வைகுந்தம் போனதும்
ஆன அபிமன்யு பேரனைக் கண்டதும்
துய்ய துரோபதி மெத்த சலித்ததும்
துலங்கு தரும் துயர் உற்றுப்போனதேன்
கலிகாலத்தை கண்டிட்டு மானே ஐவர்
வனவாசத்தை கேகினார் தேனே

தேனே மடமயில் செப்புகிறேன் கவி
சிந்தனும் பாடலை உந்தனர்க்கு நானும்
கானநீர் போலே போய்க்கிடாதே இரு
காதாலே உற்றுக் கவனிப்பாயடி
கண்ணே தமிழ் குலப்பெண்ணே கலி
காலத்தைப் பாரடி கண்முன்னே நீயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னே இருந்திட்ட முத்தமிழ் சித்தர்கள்
மொழிந்தனர் இக் கலிகால நிலைகளை
பின்னே அவர் வழி பின்பற்றியே யானும்
பிள்ளை மழலை மொழியாகப் பேசுறேன்
கன்னல் நிகர் உடை அன்னமே உலகில்
காணும் அதிசயம் என்னமே - கண்ணே

என்றென்றும் சொல்லுவேன் இக் கலிகாலத்தை
ஏதென்று பாருங்கள் காலத்தின் கோலத்தை
மன்னர் ஆட்சி மாறி மக்கள் ஆட்சி வந்து
மாட்சிமை தாங்கிய ராணி ஆட்சி மாறி
ஆட்சிகள் மாறிடலாச்சி பணக்
காசிகள் மனிதர்கள் மாறிடலாச்சி - கண்ணே

மாறிய பெண்களும் ஆண்களாய் போகுதே
மாட்டு நவுக்கைக்குள் மார்பு தெரியுதே
சீலை நயிலக்சி மேலே பறக்குதே
தினம் தினம் ஒவ்வொரு டிசனாக மாறுதே
என்ன நிலை என்றெண்ணிப் பாரு மக்கள்
எதிர் நோக்கும் கலிகால கோலத்தை கேளு கண்ணே

பாருமடி பெண்கள் பதினாறுமுழச் சேலையை
பாதம் தெரியாது மூடி நடப்பாளே
கேளுமடி இப்போது கிழவிக்கு இருமுழம்
கிட்ட நெருங்கிட ஆசை முட்டிவரும்
குட்டிகள் ஈன்றிடக் கண்டோம் வேற்றுக்
குளாய்தனில் பிள்ளை பிறந்திடக் கேட்டோம் - கண்ணே

கொண்ட கணவனை மதியாள் அவனை
கொன்று விட்டுப் பல பேரோடு திரிவாள்
அண்டினோர் தங்களை காட்டி பெரு
அணியாயமாகவே கோள்களை மூட்டி
பெண்டு பிள்ளைகளை விற்று இவன்
பேருக்கு நல்லவனைப் போல் திரிவான் - கண்ணே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிவார்கள் பல வேசம் கொண்டு தினமும்
திருடி விட்டு பல பொய்களும் கூறி
மறவார்கள் தெய்வத்தை நினையார் பாதகர்
வஞ்சனை சூது வளக்கோரம் சொல்லி
சத்தியம் தவறிடும் காலம் பொல்லாச்
சதிகேடர் துட்சணர் வாழமிக்கலாம் - கண்ணே

ஐஐயோ அநியாயம் பாரு அரிசி
ஆனைவிலைக்கு மேல் சீனி விலை
மெய்யாக அருந்தும் தண்ணீரும் கடை
வேண்டும் பொருள் பல உபயோக வகையும்
அவுன்சு கிராம் வேண்டும் காலம் பாட்டி
அறுவதிலும் பிள்ளை பெறுவும் இக்காலம் - கண்ணே

தாய் மொழி தன்னை நினையார் பல
தாரம் வைத்துக் கொண்டு சாமியார் போல
பட்டை தீட்டி பொட்டு இட்டு இவர்
பகல் வேசம் ஓர் நாளில் கரையுதே பாரீர்
தன் மகள் தனைக் கெடுத்து தந்தை
தான் நல்லவனாக வாழும் இக்காலம் கண்ணே

மண்ணில் விளையும் பொருளும் மற்றும்
மாவுடன் ஆன வத்தலும் உப்பும்
எண்ணையுடன் குடிவகையும் நாங்கள்
எந்நாளும் வேண்டிடும் எண்ணற்ற பொருளும்
வருவாய்க்கு மிஞ்சி செலவும் ஏழை
வயிற்றில் அறைந்து மடியும் இக்காலம் - கண்ணே

நல்லோருக்கு நன்மதிப்பு இல்லை அறம்
நாடி அனைவோருக்கும் நண்ணுவதில்லை
இல்லார்க்கு இரங்குவதில்லை இறைவன்
என்றும் அவன் புகழ் பாடுவதில்லை
சொல்லில் இருப்பதே விஷமே பொல்லாச்
துரோகிகள் பாதகர்கள் வாழும் இக்காலம் - கண்ணே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை தனில் பாக்குகள் காய்க்கும் தினம்
பதினாறு மாதத்தில் மறுபிள்ளை பிறக்கும்
தினையுடன் தானியம் விளையா பயிர்
செய்கை புரிந்திடும் செந்நெல் விளையா
கயமைகள் களவுகள் மிஞ்சும் மனிதன்
காட்டுமிராண்டி போல் வாழும் இக்காலம் - கண்ணே

குதிரைக்கும் கொம்பு முளைக்கும் தினம்
குழந்தைகள் ஒவ்வொன்றும் திருடிப் பிழைக்கும்
மருந்துக்கும் வரிப்பணம் உண்டு மாதா
வயிற்றிலிருந்து குழந்தை கதைக்கும்
விருந்துக்கும் அநேகம் பேர் இல்லை பிள்ளை
வேணுமென்றால் மூன்றாகவே தொல்லை - கண்ணே

காணாது இயந்திரம் கண்டோம் நேரம்
கைதனில் ரேடீயோ பைதனில் கொண்டோம்
வீணாக மனிதர்கள் கெட்டு நாட்டில்
மிருகத்தில் நிலை போல குழப்பங்கள் பட்டு
சுட்டு அழித்திடக் கண்டோம் பல
சூட்சிகளால் நாட்டைப் பிடித்திடக் கண்டோம் - கண்ணே

கற்பு நிலை தொட்டுப் போகும் பெண்கள்
காட்சிப் பொருளாக ஆட்சி புரிவார்கள்
வற்புறுத்தி பெண்ணைத் தூக்கி காட்டில்
மானபங்கம் செய்து மாணவி தன்னை
குருவுகள் புணரும் இக்காலம் சைவ
கோயில் ஐயர் திருடும் இக்காலம் - கண்ணே

மருந்துகள் மாந்திரம் பொய்க்கும் விஷ
வண்டுகள் தேள்கள் மனிதனை மொய்க்கும்
இருந்திட இடம் இன்றி தவிர்த்து மனிதன்
ஏறியே மேல் வீடு கூடியே போகும்
குருத்தினில் குலைகுலை தொங்கும் தென்னை
குரும்பையில் கன்று பதினாறு முளைக்கும் - கண்ணே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் இன்றி ஓர் வேலை நடவா நாட்டில்
பதுக்கலை மாற்றிட ஆட்சியால் முடியாது
தினம் கொலை கொள்ளைகள் கூடும் பாலர்
சினிமாவில் நினைவோடு பாடியே திரிவார்
உரமோடு எண்ணைகள் இட்டுப் பயிரை
உணவாக என்னாளும் மனிதர்கள் கொள்வார் - கண்ணே

சரமொடு சாஸ்திரம் கேட்டு வழியில்
சரசங்கள் புரிந்திட பொலிசினில் பட்டு
வர வர மானிடர் குன்றி வஸ்சினில்
வாய்தனில் பற்றிடும் புகைத்தலும் தொட்டு
நிருவாண ஓட்டமும் கண்டோம் புது
டெலிவிசன் ரீவி படத்தையும் பாத்தோம்- கண்ணே


தொலைபேசி அஞ்சல்கள் கண்டு நண்பர்
தூரத்தில் நின்றால் உடனடி பேசி
வலையெனும் நயிலோனைக் கெண்டு நீரில்
வாழ்ந்திடும் மீன் வகை தரமான துணியும்
வடிவான பூவகை வேக்கும் தலையில்
மாட்டிடும் மங்கைக்கு ஏற்ற கைக் காப்பும் - கண்ணே

காலங்கள் மாறியேபோகும் மனிதர்
கடவுளை வேண்டிட பணமிகக் குவியும்
ஞாயங்கள் நடுநிலை இல்லை எவர்க்கும்
நான் என்ற ஆணவம் மமதையும் கூடும்
வான் மழை புயல் வெள்ளம் தீயால் உலக
மக்கள் அழிந்து கலியன் முடியும் - கண்ணே

கலிகாலச்சிந்து முற்றிற்று

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை நீ இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்தாய் அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகின்றது.
மற்றொருநாள் வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்.

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org